**COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

08.07.2025

O.S. No. 291/2022

P.W.1 திரு. ஆரோக்கியதாஸ்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (3 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகள் தரப்பில்) -**

இந்த வழக்கில் பட்டிகை சொத்துக்கள் எனது அப்பாவிற்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் அது பூர்வீக சொத்து. எனது பிரமாண வாக்குமூலத்தில் 2 வது பக்கத்தில் நாகர்கோவில் சார் பதிவாளர் அலுவலக கிரய ஆவண எண். 7065/1124 M.E. ன் படியும், வாரிசு உரிமையின் அடிப்படையிலும் குடும்ப பாகப்பிரிவினை ஆவண எண். 7317/1119 M.E. ன் படியும், என் தந்தை ஐயப்பன்பிள்ளை அவர்களுக்கு உரிமைபட்டது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆவண எண். 7317/1119 M.E. ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அது எந்த ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றாலும் என்னிடம்இருந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பா என்ன வேலை செய்தார் என்றால் விவசாயம் பார்த்தார். 1 ஆம் பிரதிவாதி என்ன வேலை செய்தார் என்றால் மாவட்ட ஊட்ட சத்து அதிகாரியாக பணிபுரிந்தார். அவருடைய வருமானத்தில்தான்

வாழ்ந்து வந்தோம் என்றால் சரியல்ல. எனது அப்பா எந்த சொத்தில் விவசாயம் செய்தார் என்றால் சர்வே எண். 43/7, 41/7, மூங்கிலடிவயல் என்று சொல்லப்படும் நிலம், மற்றும் நிறைய தோப்புகள் இருந்தது. அவற்றில் விவசாயம் செய்தார். அந்த நிலங்களின் அளவு சொல்ல முடியுமா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. 3 ஆம் பிரதிவாதிக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் சரியாக ஞாபகம் இல்லை. 4 ஆம் பிரதிவாதிக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் சரியாக ஞாபகம் இல்லை. இவர்களுக்கு திருமணம் நடக்கும்போது எனக்கு என்ன வயது என்றால் 3 ஆம் பிரதிவாதிக்கு திருமணம் நடக்கும்போது எனக்கு வயது 18 லிருந்து 21 வயதுக்குள் இருக்கும். 2 ஆம் பிரதிவாதியின் திருமணத்திற்கு ஒரு வயல் கொடுத்து, பணமும், நகையும் கொடுத்தார்கள். 3 ஆம் பிரதிவாதிக்கு எனது அப்பா திருமணத்திற்கு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 3 ஆம் பிரதிவாதிக்கு எந்த சொத்தும் விற்றும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 3 ஆம் பிரதிவாதியின் திருமணம் 1989 ல் நடந்தது என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. 3 ஆம் பிரதிவாதியின் திருமணத்திற்கு என்ன செலவு செய்தார்கள் போன்ற விவரங்கள் அப்போது எனக்கு சின்ன வயது என்பதால் எனக்கு தொியாது என்றால் சரியல்ல. 4 ஆம் பிரதிவாதிக்கு காதல் திருமணம்தான் நடந்தது என்றால் ஆமாம். வா.சா.ஆ. 3 ஆவண எண். 2854/1961 கன்னியாகுமா1 சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்க தொியாது. வா.சா.ஆ. 3 ஆவணம் கன்னியாகுமரி 1 சார் பதிவாளர் அலுவலக புத்தகம் 1 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாக அந்த ஆவணத்தில் போடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு போட்டிருந்தால் உண்மையாக இருக்கலாம்.

அந்த ஆவணத்தின் தலைப்பாக செற்றில்மென்ட் பத்திரம் ரூபாய் 4,000/- என போட்டள்ளது என்றால் சரிதான். அது ஒரு உயில். வா.சா.ஆ. 3 ஆவணத்தில் நீ என்னுடைய மனைவியாகும் என்னுடைய சொல்படி நடந்து எனக்குள்ள பணிவிடைகளை செய்து வருவதால் உன்னுடைய பெயரில் எனக்குள்ள அன்பிற்கும், அபிமானத்திற்கும் பிரதிபலனாகவும், உன்னுடைய ரட்சிக்கும், குணத்திற்கும் வேண்டி என்னுடைய சர்வ சுதந்திர உரிமைபட்டு இதில் கண்ட சொத்துக்களை இந்த செற்றில்மென்ட் பத்திரம் மூலம் உனக்கு அவகாசப்படுத்தி தர வேண்டும் என்று நீ என்னிடம் அவசியப்பட்டதின்படி இதில் கண்ட நிபந்தனைகளோடு இந்த செற்றில்மென்ட் பத்திரம் எழுதி தந்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த சொத்துக்களை அப்பாவின் காலத்திற்கு பிறகு தான் அம்மாவால் எதுவும் செய்ய முடியும் என்றும், அவருடைய காலத்தில் இருவரும் சேர்ந்துதான் சொத்துக்கள் குறித்து எதுவும் செய்ய முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1 ஆவது நிபந்தனையாக தபசில் சொத்துக்களை என்னுடைய காலம் மட்டும் நாம் அனுபவித்தும், வருமானம் எடுத்தும், உன்னுடைய பெயரில் போக்குவரவு செய்து பட்டயம் பிடித்தும், தீர்வை செலுத்தியும் நடந்து கொள்வதாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் உரிய முத்திரைக் கட்டணம் கட்டி பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் செற்றில்மென்ட் ஆவணம் என்பதால்தான் அதற்கான முத்திரைக்கட்டணம் செலுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் கண்டுள்ள நிபந்தனைகளின்படி அது உயில்தான். நான் சொல்வது தவறு என்றாலும்

அந்த ஆவணம் செற்றில்மென்ட் ஆவணம் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் செற்றில்மென்ட் ஆவணத்தை ரத்து செய்யும் அதிகாரம் உள்ளதாக சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த செற்றில்மென்ட் ஆவணத்தை ரத்து செய்வதற்கு எனது அப்பா உயிருடன் இருக்கும் வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பா தன்னுடைய காலத்தில் அந்த ஆவணத்தை யாரும் கட்டாயம் செய்து எழுதி வாங்கி கொண்டார்கள் என்று எந்த ஒரு புகாரும் யாரிடமும் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணம் இருந்ததே எனக்கு தற்போதுதான் தொியும். எனது அப்பா அம்மா மீது கொண்ட பாசத்தினாலும், அன்பினாலும்தான் அந்த வா.சா.ஆ. 1 ஆவணத்தை எழுதி வைத்தார் என்றால் அப்போது என்ன நடந்தது என்று எனக்கு தொியாது.

<u>குறுக்கு விசாரணை (1 ஆம் பிரதிவாதி தரப்பில்) -</u>

3 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் மேலே செய்த குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.